மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 13, திரு. எம்.கே. சுந்தரம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

13—

தானிப்பாடியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்தல்.

22542 *திரு. எம். கே. சுந்தரம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தானிப்பாடி கிராமத்தை மையமாக கொண்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஒன்றை அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) எழவில்லை.

திரு. எம். கே. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயுள்ளம் கொண்ட தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த மாதம் 2-ந் தேதி திருவண்ணாமலை நகருக்கு வருகை புரிந்த போது, திருவண்ணாமலையிலே இருக்கின்ற அருணாச்சலேஸ்வரர் கோயில் தங்கத் தேர் அமைப்பதற்காக 60 இலட்சம் ரூபாயும், அங்கே இருக்கின்ற கோயில் மண்டபத்தை புதுப்பிப்பதற்காகவும், விமானங்களை புதுப்பித்தற்காவும் இராஜ-கோபுரத்தை அமைப்பதற்காகவும் 1.5 கோடி ரூபாய் செலவிலே அங்கே அனுமதி வழங்கினார்கள். இன்னைறக்கு தாயுள்ளம் கொண்ட தங்கத் தலைவி எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு திருவண்ணமலை-சம்புவராயர் மாவட்ட மக்கள் சார்பில் எங்களுடைய நன்றியை அவர்கள் பாதத்தைத் தொட்டு முதற்கண் தெரிவித்துக் கொள்

கிறேன். இங்கே கேட்ட கேள்விக்கு மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். தானிப்பாடி மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி ஆகும். அந்தப் பகுதியில் நூற்றுக்கு நூறு சதவீதம் என்று சொல்லப்படுகின்ற அளவுக்குவிவசாயத்தை நம்பிமக்கள் வசித்து வருகிறார்கள். அங்கே விளைகின்ற விளைப்பொருட்களைஏற்றிக் செல்ல வேண்டும் என்று சொன்னால் அருகில் இருக்கின்ற திருவண்ணாமலை நகருக்குச் செல்வதற்கு ஏறத்தாழ 35 கிலோ மீட்டர் தூரம் கடந்து செல்ல வேண்டும். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசிலனைச் செய்து விரைவில் தானிப்பாடியில் இப்படிப்பட்ட ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தைத் துவக்குவதற்கு ஆவன செய்வார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே தானிப்பாடி கிராமம்போதியவானாபுரம்ஒழுங்குமுறை விற்பனைக் கூட எல்லையில் அறிக்கையிடப்பட்டுள்ளது. தானிப்பாடியிலிருந்து வானாபுரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 23 கிலோ மீட்டர் தொலைவிலும் திருவண்ணாமலை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 28 கிலோ மீட்டர் தொலைவிலும் செங்கம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 36 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளன. மேற்கண்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு தானிப்பாடியிலிருந்து செல்ல சாலை வழித்தடங்கள் இருக்கின்றன. செங்கம் ஒழுங்குமுறை விற்பனைக் கூட தாலுகா மையத்தில் பல்வேறு வசதிகள் அமையப்பெற்று இருக்கின்றன. தற்போது தானிப்படி கிராமத்தை மையமாகக் கொண்டு புதிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைப்பது போன்ற நடவடிக்கைகள் ஏதும்அரசின் செயற்குறிப்பில் இல்லை என்பதைத்தெரிவித்ததுக் கொள்கிறேன்.

திரு. எம். கே. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் எங்களுடைய தொகுதியில் வானாபுரம் கிராமத்திலே ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைந்து இருந்தாலும் தானிப்படியிலிருந்து அங்கே வரவேண்டும் என்று சொன்னால் போதிய அளவுக்கு பேருந்து வசதி இல்லை. மேலும் தானிப்பாடி அருகில் தர்மபுரி மாவட்டத்தின் எல்லை ஒட்டியிருக்கின்ற காரணத்தால், தர்மபுரி எல்லைக்குள் இருக்கின்ற மோத்தக்கல் போன்ற குக்கிராமங்களில் இன்றைக்கு விவசாயத் தொழிலை நம்பி இருப்பவர்கள் திருவண்ணாமலை வரவேண்டும் அல்லது வானாபுரம் வரவேண்டும் என்று சொன்

னால் மாட்டு வண்டியில் வரவேண்டும் என்ற ஒரு நிலை இருக்கின்ற காரணத்தால் இதை தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து தானிப்பாடியில் ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை முன்னுரிமை தந்து அமைத்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர்களைக் கொண்ட குழு ஒன்று தானிப்பாடி கிராமப் பகுதிக்குச் சென்று அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் நிலை, அங்கே விளையும் விளை பொருட்கள் ஆகியவற்றைப் பற்றி ஆய்வு செய்து அறிக்கை தருவார்களானால் அந்த அறிக்கையில் புதிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமையக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கும் என்று அவர்கள் குறிப்பு தருவார்களானால் அரசின் நிதுநிலைமைக்கு ஏற்றவாறு பணி துவக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 14, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு பால் மற்றும் பால்வளத் துறை அமைச்சர்.

14—

சிவகாசி கூட்டுறவுப் பால்பண்ணைக்குக் கூடுதலாகப் பால் வழங்குதல்.

*21576—திரு. ஜெ. பாலகங்காதரன்:

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி கூட்டுறவுப் பால் பண்ணைக்குக் கூடுதலாக பால் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

(இ) எவ்வளவு கூடுதலாக வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கூட்டுறவு பால் பண்ணைகளுக்கு அரசு பால் வழங்குவதில்லை.

(ஆ) மற்றும் (இ): இந்தக் கேள்விகளுக்கு இடமில்லை.